

# இஸ்லாம் மித்திரன்.

# Islam Mittiran.

"லா இலாஹ இல்லல்லாஹ்
முஹம்மதுற ஸூலுல்லாஹ்"

புத். 1. { அறப் ஹூ 1312 முஹர்ரம்மீ 15 உ பு. ஊ. / இங்கிலிஷ் ஹூ 1894 ஜுலை மீ 18 உ பு. கி. } இல. 11.


## வித்தை விபசாரத்தை விலக்கும்.

இஸ்லாம் மார்க்க அனுசாரியாகிய ஒரு அரசர், தமது நாடு நகரங்களைத் தெரிசிக்கும்படி தமது மந்திரி பிரதானி முதலிய பரிவாரங்கள் சகிதராக சுற்றோட்டத்திற் சென்று ஓர் விடத்தில் தங்கினார். ஆனால் ராசன் தமது ராச உடுப்புகள் உடுக்காது உரு மாற்றிக்கொண்டுதான் போயிருந்தார். அவர் தமது பரிவாரங்களை நிறுத்திவிட்டு தனிமையிலே ஓர் தெருப்பாதையிற் செல்லும்போது தமக்குத் தண்ணீர் தாகமுண்டானது. அப்போது தாகத்தைச் சகிக்கக்கூடாதால் அங்குள்ள ஒவ்வொரு வீட்டுவாயல்களிலும் தண்ணீர் கொடுங்கள் என்று கேட்டுங் கொடுக்கவில்லை பின்னே ஒரு வீட்டில் ஒரு அழகு சவுந்திரியமான வாலிபப் பெண் ஒரு கின்னற் தண்ணீர் கொணர்ந்து கொடுத்தாள், அதை ராசன் வாங்கித் தாகந்தீரக் குடித்துவிட்டு, பின்னேயும் அவளின் வடிவுக்காக எரிட்டுப் பார்த்தார் இவருக்கு தண்ணீர் தாகம் நீங்கவே மோகதாபமுண்டாகி விட்டது. ஆகவே, அவர் தன் வாயைதிறந்து அழகிய சுந்தரியே, நீ என் தண்ணீர் தாகத்

ளைத் தீர்த்துவிட்டாய், அதற்காக உனக்கு வந்தனஞ் சொல்லுகிறேன். உன்னால் நிறைவேற்றக்கூடிய இன்னுமொரு விடாய் எனக்குண்டாயிற்று. அதை நீ நிறைவேற்றவேண்டுமென்று அறிகுறியாய், (சினா) விபசாரமாகிய கெட்ட செயலுக்கழைத்தார். அப்போது அந்த வாலிபப்பெண் புத்திசாலியும் வித்தையிற் சிறந்த விவேகியாயுமிருந்ததால், இவரை அவ்வூரை யாரும் ராசனென்று அறிந்துகொண்டு ராசனுக்கமையாவிட்டால் தண்டனைக்கிடமாகுமென்கிறதையுமுணர்ந்துகொண்டு, அவர் சொல்லுக் கிணங்கினவளைப்போல சாடைகாட்டினவளாய் சற்றென்றுள்ளேபோய், அவர் அழைத்த காரியத்திற்காக ஆயத்தப்படுத்துமாறு கொஞ்சம் தாமதித்து, திரும்பி நம் வேத சாஸ்திர புத்தகமாகிய ஒரு அறபு கித்தாபைக்கொண்டுவந்து ஓ! ஐயாவே! இதைத் தாங்கள் இதோ இப்படி உட்கார்ந்து வாசித்துக்கொண்டிருங்கள், உள்ளே ஒரு சொற்ப வேலையிருக்கிறது முடித்துக் கொண்டு வருகிறேன் என்றுசொல்லி புத்தகத்தைக் கையிற்கொடுத்துவிட்டு உள்ளே சென்றாள். ராசன் இவள் தனக்காகத்தான் ஏதோ காரியத்தில் போயிருக்கிறாள். இனி நமது காரியம் பலித்துவிடுமென்று கருதினவராக, அவர் கொடுத்த புத்தகத்தை வாசிக்கத்தொடங்கினார். அவர் வாசிக்கும்படி புத்தகத்தைத் திறந்த பக்கத்தில் விபசாரத்தைப்பற்றிய சங்கதியின் பாடம் எழுதப்பட்டிருந்தது. அ[illegible]த்தான் வாசிக்கத்தொடங்கினார். அதில் விபசாரத்தைப்பற்றிய கெடுதிகளும், அதனால் இப்பூலோகத்திற்றானே அடையும் மானபங்கங்களும், கிரந்தி, நீரழிவு, நீர்க்கடுப்பு, கைகால் பிடிப்பு, அரையாப்பு, வெட்டை, புண் முதலிய கெட்ட நோய்களும், மார்க்க சட்டத்திற் கூறப்பட்ட தண்டனைகளும், மறுமையில் அடையயிருக்கின்ற நரக யாதனைகளும், அதைத் தவிர்ந்து நடந்தோர்கள் இருலோகங்களில் அடையும் பேறு (நன்மை)களையும் விசேடமாயெழுதியிருக்கக் கண்டார். கண்டமாத்திரத்தில் அவருடைய மனதி லெழுந்திருந்த மோகமென்னுங் காம தீயானது பருதியைக்கண்ட பனிபோல அகன்றது. ராசாவானவர் கல்வியுடையவராயும் கூர்மையான புத்தியுடையவராயும், ஈமான் என்னும் மார்க்க விசுவாச பக்தியுடையவராயும் இருந்ததால், அஞ்சிப் பயந்து உரோமஞ் சிலிர்த்து, ஆ! நான் இதென்ன பாவமான காரியத்தில் என் நாவை உசுப்பிப் பாவப்பயிரை விளைக்க மனதில் இடங்கொடுத்தேனே? என்று பரிதபித்து, (அஸ்தகுபிருல்லாஹ்,) நாயனே என் பாவத்தை மன்னிப்பாயாக, வென்று பாவமன்னிப்புத் தேடினவராய், அந்த உள்ளே சென்ற பெண்பிள்ளையை விளித்து, அம்மா! அம்மா! இங்கேவாருங்கள், இதோ தங்கள் புத்தகத்தைப்பிடியுங்கள் நான் போகிறேன் என்று சொல்லிவிட்டு யாதொன்றும் பேசாதுபோய்த் தன் பரிவாரங்களோடு நகர் சேர்ந்தார்.

கல்வி அறிவிருந்ததால் கெட்டசெயலைவிட்டும் இருவர்களுங் காக்கப்

பட்டார்கள். ஆகையால், கல்வியைக் கற்று நன்னெறியுறுங்கள், அதை விட்டுப் புன்னெறி புகாதிருங்கள்.

# பொறாமை என்பது என்ன!

அல்லாஹுத்தஆலாவால் ஒரு மனிதனுக்குக் கொடுக்கப்பட்ட சம்பத்துகளைப்பார்த்துமனப்பொறாமையாயிராமல் அவைகளை அம்மனிதனை விட்டு நீக்க விரும்பும் எண்ணத்தையே பொறாமையென்று சொல்லப்படுகின்றது. அறபுப்பாஷையில் "ஹஸது" என்று சொல்லப்படுகிறது. சர்வ வல்லவனாகிய அல்லாஹுத்தஆலா பரிசுத்த குர் ஆன் சரீபில் "ஒருவனுக்குக்கொடுக்கபபட்ட சம்பத்துகளைக் குறித்து பொறாமை கொள்ளுகிறீர்களோ" என்று வற்புறுத்தித் திருவுளம்பற்றியிருக்கிறான். இன்னும் சர்வ நபிகட்கும் நாயகரான எங்கள் இரட்சக நாயகர் திருவாய்மலர்ந்து நெருப்பு விறகை எரித்துப்போடுவதுபோல பொறாமை வணக்கங்களின் பலனைக்கெடுத்துவிடும், ஆகையால் பொறாமையைக்குறித்து எச்சரிப்பாயிருங்கள்.

பொறாமை நாலுவழியாக உண்டாகும் என்று அப்துல்லாஹிப்னு சவைப் கூறுகின்றார்கள். அந்நாலு வழிகளுமாகிறது; கண், நாவு, மனம், அவா என்பவையே.

உன்னுடைய கண் முறைகேடான துன்மார்க்க விஷயங்களை நோக்கின்றதாவென்றுபார். அல்லாஹுத்தஆலா உனது மனதிலுள்ளவைகளையறிந்திருக்க அவைகளை மாற்றமாக்கி, உன் நாவு மொழிகின்றதாவென்று நோட்டமிடு, உனது ஹிருதயத்தில் முஸ்லிம்கள்பேரில் வன்மங்குடி கொண்டிருக்கிறதாவென்று ஆராய்ந்தறி, கெடுதியான விஷயத்தில் உனது ஆசை செல்லுகிறதாவென்று விளங்கு. இந்தச் சொல்லப்பட்ட நான்கு காரியங்களும் உன்னிலிருந்தால், சாம்பலையள்ளி உன் தலையில் போட்டுக்கொள். நீ திட்டமாக மூதேவியாகப் படைக்கப்பட்டுப்போனாய் என்று நிச்சயப்படுத்திக்கொள், என்று மேற்படி அப்துல்லா ஹிப்னு சவைப் அவர்கள் சொல்லியிருக்கின்றார்கள்.

முர்சிது என்கிற கித்தாபில் பொறாமைக்காரனுடைய குணத்தைப் பற்றிக் கூறியிருப்பதாவது:-ஒருவனைக் கண்டவிடத்தில் உவப்பானவனாகவும், அவன் மறைந்த காணாதவிடத்தில், அவனுக்கு விரோதமாகப் புறம்பேசுகிறவனாகவும், அவனுக்கு ஆபத்துகளுண்டானால் மகிழ்ச்சி கொள்ளுகிறவனாகவு மிருப்பதுவேயாம்

பொறாமை வைத்திருப்பவனுக்கு இவ்வுலகத்திலும் மார்க்க விசுவாச விஷயங்களிலும் அவனுக்கு அது சங்கடத்தை வருத்தும்.

பொறாமை வைத்திருப்பவன் நபிமார்கள், சன்மார்க்கர்கள், முதலிய

வர்களைவிட்டும் பிரிந்திடுவான். அல்லாஹுத்தஆலாவுக்குப் பகையானவர்களோடு சேர்ந்திடுவான். காயன் ஒருவனுக்குக் கொடுத்த சம்பத்துகளைப் பிரித்துக் கொடுத்ததைப் பார்த்து சகிக்கமாட்டாது பொருத்தக்கேடுள்ளவனாயிருக்கிறான். பொறுமை கொள்ளுகிறதினால், தன்னுடைய நன்மைகளையெல்லாம் வீணாய் இழக்கின்றான். மூதேவித்தனத்தை மிகுதப்படுத்திக் கொள்ளுகிறான். எவ்வேளையும் மனதில் கவலையென்னும் துக்கத்தை நிலையாக்கிக் கொள்ளுகிறான். இதனால் அவனிலுள்ளவை யொன்றும் அவனுக்குப் போதியதாகக் காணமாட்டாது. ஆகவே அவையெல்லாம் அவனுக்கு இல்லையென்பதும் உதவாதென்பதுமே அவன் முடிவில் பெறும் பேறு.

ஆகையினால் இஸ்லாம் மித்திரர்களே! ஹஸது என்னும் பொறுமையை உங்கள் ஹிருதயத்தில் தரிக்க விடம் விடாது நல்லறிவைக் கொண்டு விலக்கி, தேவ பயம், சற்குணம், வணக்கம், தியானம், முதலியவைகளைச்செய்து தேவாசீர்வாதம் பெற்றுய்வீர்களாக.

## குணமற்றோரை நேசித்தல் கூடாது.

நற்குணமில்லாதவரைச் சிநேகிப்பது கடைசியில் கேடாய் முடியும். குணமற்றோர் சிநேகிதத்தைக்குறைப்பதே நன்று கெட்டகுணமுடையவன் கண்சடைய பாம்பு போன்றவனாயிருப்பான். பிரயோசனமுள்ள காலத்திற்சேர்ந்து நடந்து பிரயோசனமில்லாத காலத்தில் வெறுத்து நடப்போர் கெட்ட குணமுடையவராவர். சிலர் நேசத்தின் பயனை ஆராயாமல் தமது நயத்தையும் பணத்தையும் பார்க்கும் சிநேகிதரும், விலைமாதரும், பிறருக்குக் கேடுவருகின்றதே என்று யோசியாது திருடும் கள்ளரும், குணத்தில் ஒத்த தன்மையுடையவராவர். ஆகவே, இவர்களின் குணம் பார்வைக்கு நல்லதாய்க் காண்கினும் கெட்டதென்றே உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். அறிவில்லாதவருடன் சிநேகிதஞ் செய்து லாபத்தை யடைவதிலும், அறிவுடையோருடன் சிநேகிதஞ்செய்து நஷ்டத்தைப் பெறுவது நன்று, அறிவுடையோரின் சிநேகிதத்தால் ஒருபோதும் சதாகால மனவருத்தத்தைத் தரும்படியான நஷ்டத்தை யடையமாட்டான். ஆனதுபற்றியே அறிவில்லாதாரின் சிநேகிதத்திலும், அறிவுடையாரின் பகை நன்று என்று வித்வான்கள் கூறினார்கள் தனித்திருந்தபோது நற்பாடி சபையிலே பலருடன் இருந்தபோது பழிச்சொல்லுபவரைக் கனவிலும் நினைத்தால் கூடாது. உள்ளியைச் சுத்திபண்ணினாலும் அதன் குணம்போய் நறுமணம் உண்டாகாததுபோல கெட்ட குணமுடையவனை எவ்வளவு நற்புத்தி போதித்தாலும் நல்லவனாக மாட்டான்.

முகிலின் நிழலும், புல்லின் நெருப்பும், நீசரது ஊழியமும், நீரிற் குமிழியும், வேசை அன்பும், தீயவனது பட்சமுமாகிய இவை ஆறும் நிலையில்லை என்று அறிவாளிகள் கூறினார்கள்.

## இமாம் அபுல்ஹஸன் சாதுலி றஹ்மஹுல்லாஃ அவர்கள் சரித்திரம்.

[ சென்ற 10 லக்கப் பத்திரிகைத் தொடர்ச்சி ]

எங்கள் நாயகம் அபுல்ஹஸன் சாதுலி றஹ்மஹுல்லாஃ அவர்களுடைய உஸ்தாது (குரு) நாயகம், அப்துஸ்ஸலாம் இப்னு மசீஷ் "கத்தஸல்லாஹு ஸிர்ரஹுல் அசீஸ்" அவர்களுடைய மடிமீதிருந்த பாலகன் சாதுலி இமாம் அவர்களை விழித்து உமது இதயத்தில் அல்லாஹுத்தஆலாவுடைய அந்தரங்க பொக்கிஷம் சேமம் வைக்கப் பட்டிருக்கிறது என்று சொன்னதென்று கூறினோமல்லவா? அதற்கு மெய்ஞ்ஞானவிளக்கத்தையுடைய வைதீகஞானமேதாவியர்களிற் சிலர் வெளிப்படுத்தியிருக்கும் கருத்துரையை நாம் விவரிக்கின்றோம். அந்த அந்தரங்கமாவது அல்லாஹுத்தஆலா உடையவும், நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுடையவும், கிலாபத்தென்றும் அதிகாரத்துவமாம். நுபுவ்வத்தென்னுந் தீர்க்கதரிசித்துவம் என்னும் பட்டம், எங்கள் நபிகள் பெருமானார் அவர்களோடு முடிவுக்கு வரவே, அத்தோடு அந்த "அந்தரங்கம்" விலாயத் என்னும் அற்புதாத்துவமாய்ப் பெயர்ந்தது. இதுவே அதன் உள்ளமையாம். ஆகவே, இதோ மேலே விவரிக்கப்பட்ட "கிலாபத்"-"விலாயத்" என்னும் அந்தரங்கம் யாரிடம்வைக்கப்படுமோ, அவர், நபிகள் நாயகம் அவர்களின் ஒர் "மக்காம்" என்னும் பதவியிலும், சொல்லிலும், கிரியையிலும், குணத்திலும், அநந்திர விகிதப்படி, அவர்களுக்குப் பிரதியாக இப்பிரபஞ்சத்தில் "குத்பு-கவுது-பர்து-" என்னும் தேவ மகத்துவ பட்ட நாமங்களைப் பெற்று வெளிக்கிடுவார்கள். அந்த அந்தரங்கத்தின் அதிகாரத்துவத்தின் பேரால் தங்களது காலத்திலுள்ள அவுலியாக்கள் என்னும் மகாத்துமாக்சள் யாவரும் தங்களது அதிகாரத்தின் கீழாயிருக்கக் கற்பினை செய்வார்கள். அந்தக் கற்பினைக்குக் கீழ்ப்படியாதவர்களின் விலாயத் என்னும் அதிகாரம் பறிக்கப்பட்டு, மெய்ஞ்ஞானிகளாகிய மகாத்துமாக்களின் கூட்டத்தால் நீக்கப்படவுஞ் செய்வார்கள். அங்ஙனஞ் செய்வதற்கு நாயன் புறத்தாலவர்கட்கு அதிகாரமுண்டு.

இந்த "ஸிர்ரு" என்னும் ஞானாந்தரங்கத்தி னதிகாரதத்தின் விசேஷம் பற்றியே எங்கள் குத்பு நாயகம் ஸெய்யிதினா முஹியித்தீன் அப்துல் காதிர் றளியல்லாஹு அன்ஹு அவ-

ர்கள் திருவாய் மலர்ந்து வலிமார்களின் புயத்தின் பேரில் தங்கள் திருப்பாதம் என்றும், குத்புல் அக்பர் ஸெய்யிதினா அபுல்ஹஸன் சாதுலி றளியல்லாஹு அன்ஹு அவர்கள் திருவாய் மலர்ந்து வலிமார்களின் நெற்றியின் பேரில் தங்கள் திருப்பாதம் என்றும் அருளியிருக்கின்றார்கள். இவ்வாறு வேறு சில குத்புமார்களுங்கூறியிருக்கின்றார்கள். அந்த அந்தரங்கத்திற்காய் இவ்வுலகின் கண்ணுள்ள சகல சிருட்டிகளும், வானலோகத்திலுள்ள அமரர்களும் ஆதம் நபி அவர்கட்கு வான லோகத்தார்கள் கனதி மரியாதை செய்தவாறு இவர்களுக்கும் அங்ஙன மரியாதை புரிவார்கள்.

இந்த அந்தரங்கமானது இப்பிரபஞ்சத்தில் சீவனோடிருக்குங் குத்புமார்களிலே திரும்பிவரும் என்று சொல்லப்படுகின்றது. அதற்கோர் உதாரணம் காட்சியாவது:- குத்பு சம்ஸுத்தீன் ஹனபீ ஆண்டவர்களுடைய மனைவியாருக்கு ஓர் வருத்தம் நிகழ்ந்தபோது அந்த அம்மாள், அஹ்மதுல் பதவி ஆண்டவர்களிடம் காருண்யத்தைத் தேடியழைக்கவே, உடனே அந்த நாயகம், அந்தக் கற்பு நாயகியாகிய அம்மாளை நோக்கி, ஓ! அம்மா! நீயோ ஓர் பாரதூரமாகிய வல்லபத்தை யுடைய சீவித்திருக்கும் குத்புடைய காருண்யத்தின் கீழிருந்துகொண்டு என்னைக்கூப்பிட்டு ஆவதென்ன? யாஸெய்யிதி (எனது நாயகமே!) சம்ஸுத்தீனே! என்று கூப்பிடுவாயாக், அப்போதே உனக்கு உதவி கிடைக்கும் என்று சொல்லவே, இதே பிரகாரம் அந்த அம்மாள் தங்கள் புருஷ நாயகத்தைக் கூப்பிட்டட்சணமே! அந்த நாயகிக்குண்டாயிருந்த துன்பம் நீங்கி சுகம் பெற்றார்களென்று "தபக்காத்" என்னுங் கித்தாபில் வருகிறது. இஃதன்றி.

இப்பிரபஞ்சத்தால் மரணத்தால் நீக்கப்பட்ட அதாவது மவுத்தான அநுபவித் தடக்கஞ் செய்யப்பட்ட வலிமார்களிடம் ஒருவன் பொரிசு தேடினால், அந்த உதவி யென்னும் பொரிசை ஹயாத்தாகிய குத்பிடமிருந்து போய் அவராலே கிடைக்கப்பெறுகிறான் என்றும் மேற்படி "தபக்காத்" தில் தானே கூறப்படுகின்றது. இதனால் விளங்கிறதாவது, ஹயாத்தாயிருக்கும் குத்புடைய மததென்னும் உதவியின் காரணாதிகாரத்துவத்தினாலே மவுத்தாகிய வலிமார்களிடந் தேடும் பொரிஸாம் நிறைவேற்றப் பெறுகிற தென்பதுவேயாம். இதற்காகத்தான் சூபியாக்களின் பாதைகளைத் தொடர்ந்து நடக்க விருப்புமுறும் சிஷ்யர்களுக்கு ஹயாத்தான செய்கே வேண்டுமென்று முன்னன் என்கிற கித்தாபில் சஉறானி றஹ்மஹுல்லாஹ் கூறியிருக்கின்றார்கள். ஆகவே, மேலே சொல்லப்பட்ட குத்பிய்யத்துடைய அந்தரங்கத்தைத் தங்கள் செய்காகிய அப்துஸ்ஸலாம் இப்னு மசீஸ் றளியல்லாஹு அன்ஹு அவர்களிடமிருந்து பிறபராயத்திலே குத்பு நாயகம் சாதுலீ இமாம் அவர்கள் பெற்றுக்கொண்டார்கள்.

சூபியாக்களுடைய கூட்டத்தில் குருவின் உள்ளமையின் அந்தரங்கத்தை அநந்திரம் பெறுபவரே குருவுடைய குத்பிய்யத்துடைய மக்காம்களை அநந்திரம் பெறுவார். அவரே செய்குக்குப்பின்னர் குத்பாகவும் செய்குடைய மகாமில் செய்காகவுமிருப்பார். மற்றும் குலபா (சிரேட்ட சிஷர்) கள் சாதாரன சிஷர்கள் யாவரும் செய்குடைய பிராண அந்தரங்கத்தைப் பெறுவார்கள். இதுவே சூபியாக்கள் என்னும் மெய்ஞ்ஞானிகளின் பிரமாணமாம். எங்கள் குத்பு நாயகம் ஸெய்யிதினா அபுல் ஹஸன் சாதுலி றழ்மஹுல்லாஃ அவர்கள் இந்தப் பிரமாணத்தின்படி தங்களது செய்குடைய (முரீதின்களாகிய குலபாக்கள் அவுலியாக்கள் யாவரில் நின்றும்) தாத் என்னும் உள்ளமையின், அந்தரங்கத்தை அநந்திரம் பெற்றார்கள் ஆதலால், செய்குக்குப் பிற்காலத்தில் குத்பு என்னு மகத்துவத்தைப் பெற்று நின்றார்கள். இதனால் செய்குடைய பிராண அந்தரங்கத்தை அநந்திரம் பெறுவோர் குலபாக்களாகவும் அவுலியாக்களாகவும், ஆவார்களென்றும், செய்குடைய தாத்துடைய அந்தரங்கத்தை அநந்திரம் பெறுவோர் குத்பாகி பின்னதிகாரியாய் வருவார் என்றும் மெய்ஞ்ஞான வேதாந்திகளின் பிரமாணம் விளக்குகின்றது மெய்ஞ்ஞானிகளின் தோரணி விஷய ஏகாந்த புதை பொருள் காரியா காரியங்களை இவ்விடத்தில் அதிகமாய் விவரித்தற்கு தருணமல்ல வென்று கருதி இம்மட்டில் நிறுத்தி, எங்கள் செய்கு நாயகம் அவர்களின் உஸ்தாது நாயகம் ஸெய்யிதினா அப்துஸ்ஸலாம் இப்னு மசீஷி றளியல்லாஹு அன்ஹு அவர்களின் ஓர் விருத்தாந்தத்தை இங்கே கொஞ்சமாய்க் கூறிப் பின்னே குத்பு நாயகத்தின் பிரயாண சங்கதியைக் கூறுவோம்.

செய்கு முஹியித்தீன் அப்துல் காதிர் சாதுலி றழ்மஹுல்லாஃ அவர்களா லியற்றப்பட்ட "கவாகிபுஸ்ஸாஹிறாஃ" என்னுங் கித்தாபிலும், "மபாகிர்" என்னுங் கித்தாபிலும் பின்வருஞ் சங்கதி எழுப்பட்டிருக்கின்றது. ஸெய்யிதினா அபுல்ஹஸன் சாதுலி றழ்மஹுல்லாஹு அவர்களுடைய குரு ஸெய்யிதினா அப்துஸ்ஸலாம் இப்னு மசீஷி றளியல்லாஹு அன்ஹு அவர்களே இவர்கள் எங்கள் நபிகள் பெருமானார் முஹம்மதுநபி அலைஹிஸ்ஸலாத்துவஸ்ஸலாம் அவர்களின் பௌத்திரசிகாமணியாகிய பாத்திமா நாயகியாரின் சிரேட்ட குமாரராகிய ஹஸன் றளியல்லாஹு அன்கு அவர்களின் மரபிலுதித்த சங்கைக்குரிய ஸெய்யிதும் சரீபுமா யிருப்பதோடு மூன் சொற்ற முர்ஸல் நபி பௌத்திர பௌத்திராராயுமிருக்கின்றார்கள்.

ஸெய்யிதினா அப்துஸ்ஸலாம் றளியல்லாஹு அன்ஹு அவர்களின் பிதா ஸெய்யிது மசீஷ், அவர்களின பிதா ஸெய்யிது மன்ஸூறு, அவர்கள் பிதா ஸெய்யிது இப்ருஹிமுல் ஹஸனில் இட்றீஸி, இவர்கள் தான் நாம் ஏற்கனவே முன் பயிரங்கப்படுத்திய பாஸ் என்னும் நகரிலடங்கியிருக்கும் ஸெய்யிது இட்றீ

ஸாஹ் அப்பர் றளியல்லாஹு அன்ஹு அவர்களின் குமாரர்.) இவர்கள் ஸெய்யிது அப்துல்லாஹ் என்னும் நாயகத்தின் புதல்வர். இவர்கள் வலிகள் சிகாமணி இமாம் ஹஸனுல் முதன்னா றளியல்லாஹு அன்ஹு அவர்களின் குமாரர். இவர்கள் றஸூலுல்லாஹ்வின் பௌத்திரராகிய ஹஸன் றளியல்லாஹு அன்ஹு அவர்கள். இவர்களில் நின்றுந்தான் ஸெய்யிது அப்துஸ்ஸலாம் குத்பு நாயகம் அவர்களின் தலைமுறையுண்டாயிருக்கின்றது.

இமாம் அபுல்ஹஸன் சாதுலி றஹ்மஹுல்லாஹ்வின் குருவாகிய நாயகம் அப்துஸ்ஸலாம் றஹ்மஹுல்லாஹ் அவர்கள் இப்பிரபஞ்சத்தின் கண் உற்பவிக்கும்போதே குத்பு என்னும் மஹத்துவ பட்டம் பெற்றவர்களாகவே பிறந்தார்கள். இந்த நாயகம் பிறந்த காலத்தில் குத்பு நாயகம் முஹியித்தீன் அப்துல்காதிருல் ஜெய்லானி றளியல்லாஹு அன்கு ஹயாத்தோடிருக்கின்றார்கள் அப்போது இந்த குத்பு அவர்கள் பிறந்த அன்றைத்தினத்தில் "அப்துல் காதிரே! இன்றைக்கு மகுறிபு தேசத்தில் முன்வருங்காலத்திற்கு வெளிக்கிடும் குத்பு ஒருவர் பிறந்திருக்கிறார், நீர் போய் அவரை தெரிசனை செய்து அவருடைய பிதாவுக்கு மங்கலவார்த்தை கூறும் என்று உருத்தோற்றியின்றி, அல்லாஹ் ஸுப்ஹானஹுவதஆலா உத்தரவு செய்தான். சர்வ வல்லமையுள்ள அல்லாஹ் பிறத்தால் அசரீர வாக்காய்வெளியான சத்திய தொனியைக்கேட்ட குத்பு நாயகம் அப்துல் காதர் ஜெய்லானி றளியல்லாஹு அன்ஹு அவர்கள் உடனே புறப்பட்டு மகுறிபு தேசத்திற்கு சென்று அங்குள்ள ஜபலுல் அலாம் என்னும் மலைக்குப்போய் நாயகம் மஷீஷ் றஹ்மஹுல்லாஹ் அவர்களும் [illegible]யைக்கண்டு, உடனே னுடைய பிள்ளைகளை என்னிடங்கொண்டுவருவீராக வென்று ஆக்கியாபித்தார்கள், உடனே அவர்கள் அப்துல் காதர் ஜெய்லானி றளியல்லாஹு அன்ஹு நாயகத்துடைய சமுகத்தில் தங்கள் பிள்ளைகள் சகலரையுங் கொண்டுவந்துவிட்டார்கள். அவைகளைப் பார்த்து நான் இந்தக் குழந்தைகளை அல்ல நாடினது என்றார்கள். அப்போது, நாயகமே இன்று பிறந்த பாலகன் ஒன்றைத்தவிர வேறு குழந்தைகள் கிடையாதென்றார். அப்படிச் சொல்லவே அந்தக் குழந்தையைத்தான் நான் நாடிவந்திருக்கிறேன். அதைக் கொண்டுவாருங்கள் என்று அப்துல் காதர் ஜெய்லானி றளியல்லாஹு அன்ஹு சொன்னார்கள், அப்போது மஷீஷி என்பவர்கள் மவலானா அப்துஸ்ஸலாம் அவர்களைக்கொண்டுவந்துகொடுக்கவே, ஜெய்லானி றளியல்லாஹு அன்ஹு வாங்கி முத்தமிட்டார்கள் முத்தமிட்டு சோபனங் கூறிய பின்னர், அக்குழந்தையின் தகப்பனாரை விளித்து, மஷீஷியவர்களே! இந்த அற்புதக் குழந்தையின் காரணத்தால் நீங்கள் சோபன மடையுங்கள், இவர்கள் மகா கனதியையுடைய குத்பாக வெளிக்கிடுவார்கள். பிரபலியமான அற்புதாதிஜயங்களெல்லாம் இவர்களுக்குண்டாகும், இன்னும் இவர்கள் இப்பூலோகத்தில் மிகப் பிரஸ்தாபமான மூன்று குத்புமார்களுக்குக் குருவாயிருப்பார்கள், அம்மூன்று குத்புமார்களுமாகிறது அபுல்ஹஸன் சாதுலி, அஹ்மதுல்பதவி, இப்றாஹீம் முத்தஸூக்கி என்னுங் குத்புமார்களே. (றளியல்லாஹு அன்ஹும்.) என்று பலவாறு சோபனவார்த்தைகளைக் கொண்டு நன்மாராயஞ் சொல்லிவிட்டுச் சென்றார்கள்.

இன்னும் வரும்.